## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 | (i) | உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | (ii) | கடன்பட்டோர் தொடர்பாக போதியளவில் அறவிடமுடியாக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | 24 கடன்பட்டோருக்குரிய ரூபா 1,035,907 தொகையான செலவு மீதி வரவு மீதியிலிருந்து பதிவழிக்கப்பட்டு |

| | |
|---|---|
| | கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 09 | நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட முறைமை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 29 | வருமானத்தை இனங்காண்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய 12 சீனிப் பரிசோதனை உபகரணத் தொகுதிகளின் பெறுமதியான ரூபா 120,000 தொகை பிழையாக கித்துள் செயற்திட்டப் பிரிவின் இறுதியிருப்பில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ம் ஆண்டில் மீள்பெறுமானம் செய்யப்பட்ட 04 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 2,536,788 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டதனால் பெறப்பட்ட இலாபமான ரூபா 1,169,776 தொகையானது ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு மேலதிகமாக அவ்வாகனங்களை மீள்கணிப்பீடு செய்யப்பட்டதனால் உருவாகியிருந்த ரூபா 1,683,476 தொகையான ஒதுக்கங்களும் ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததனால் அத் தொகையினால் ஆண்டின் வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிர்மாணச் செயற்பாடுகள் முடிவடையாதிருந்த தொழில்நுட்ப சேவைக் கட்டிடத்திற்காக ரூபா 8,730,724 தொகையும் மொனராகலை மாவட்ட செயலகத்திற்காக ரூபா 1,787,500 தொகையும், லக்கம் கட்டிடத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,621,401 தொகையும் ஆன ரூபா 12,139,625 தொகை கட்டிடப் பெறுமதியில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,041,600 பெறுமதியான 03 மடிக்கணனிகளுக்காக பெறுமானத்தேய்வு இடப்பட்டிருக்கவில்லை. அதன்

பிரகாரம் ரூபா 208,320 தொகையான பெறுமானத்தேய்வு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) அலுவலக தளபாட உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் உள்ளடங்கலாக 12 நிலையான சொத்து விடயங்களில் மேலும் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதியான ரூபா 26,881,326 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிலையான சொத்துக்களின் விற்பனை இலாபம் ரூபா 1,169,776 தொகையானது நிதிப்பாய்ச்சல் கூற்றில் வரிசெலுத்துவதற்கு முன்னரான இலாபத்தில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களின் விற்பனையினால் பெறப்பட்ட பணம் ரூபா 2,536,780 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,853,252 என ரூபா 316,472 தொகை அதிகமாக நிதிப்பாய்ச்சல் கூற்றில் முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) நடப்பாண்டின் வட்டி வருமானமான ரூபா 1,182,370 மற்றும் வட்டிச் செலவினமான ரூபா 11,695 தொகைகள் நிதிப்பாய்ச்சல் கூற்றில் வட்டியின் கீழ் தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 - 2013 ஆகிய 03 வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ஆண்டின் செலவினமாக வருமானக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக அச் செலவினத்தில் ரூபா 673,850 தொகை வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ரூபா 1,347,702 தொகையானது ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதி அறிக்கைகளின் பிரகாரம் காணப்படுகின்ற பின்வரும் செலவின விடயங்கள் மற்றும் உரிய உபயோகப் பதிவேடுகளுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | நிதி அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | துணைப் பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பாதுகாப்புச் செலவினம் | 15,957,956 | 17,219,902 | 1,261,946 |
| மின்சாரம் | 10,811,791 | 11,045,144 | 233,353 |

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த இருப்பு மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த இருப்பு என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் இருந்தன.

| பிரிவு | இறுதிக் கணக்குகளின் பிரகாரம் | இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| உபகளஞ்சியம் வார்ப்புப் பிரிவு | 3,048,963 | 3,034,606 | 14,357 |
| கிராம அபிவிருத்திப் பிரிவு மற்றும் கித்துல் நிகழ்ச்சித்திட்டம் | 16,509,779 | 16,743,719 | (233,940) |
| இறப்பர் களஞ்சிய அபிவிருத்திப்பிரிவு | 8,919,115 | 4,555,591 | 4,363,524 |
| | 28,477,857 | 24,333,916 | 4,143,941 |

மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் மீளாய்வாண்டின் தேறிய இலாபத்தை ரூபா 4,143,941 இனால் அதிகரிப்பதற்குத் தாக்கமளித்திருந்தன.

(ஆ) நடப்பாண்டின் நிதி அறிக்கைகளில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கிடைக்க வேண்டிய வெற் வரியாக ரூபா 12,860,357 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும்

ஆண்டின் இறுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரி அறிக்கையில் அது செலுத்த வேண்டிய வெற் வரி ரூபா 149,749 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 13,010,106 தொகை விளக்கமளிக்கப்படாத வேறுபாடாக இருந்தது.

### 1.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

(i) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் கிடைக்கவேண்டிய 30 கணக்குகளுக்குரிய மொத்தப் பெறுமதி ரூபா 54,888,710 ஆக இருந்ததுடன் 1 வருடத்திற்கு குறைவான தொகை ரூபா 14,443,562 ஆகவும், 1 - 2 வருடங்களுக்கிடையே ரூபா 3,758,618 தொகையும் 2 - 4 வருடங்களுக்கிடையே ரூபா 1,936,495 தொகையும், 4 - 5 வருடங்களுக்கிடையே ரூபா 8,277,793 தொகையும், 5 வருடங்களுக்கு மேற்பட்ட தொகை ரூபா 26,472,242 ஆகவும் இருந்தன. அம் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் 10% ஆன ரூபா 5,047,335 ஐயக்கடன் ஏற்பாடும் அதற்குப் போதியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்குகளின் பிரகாரம் “வாடிக்கையாளருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டமை” எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 464,890 கூட்டுத் தொகையான 03 கடன்பட்டோர் கணக்குகளில் செலவு மீதிகள் காணப்பட்டதுடன் அவ்வாறு ஏற்பட்டமைக்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 808,978 கூட்டுத்தொகையான நானாவிதக் கடன்பட்டோரில் ரூபா 462,845 தொகை மற்றும் கடன்பட்டோரின் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியான ரூபா 346,133 தொகைகள் என்பன அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

(iv) சபையின் 5 வங்கிக் கணக்குகளில் நடப்பாண்டின் இறுதியில் ரூபா 3,125,837 தொகையான இனங்காணப்படாத வைப்புக்கள் காணப்பட்டதுடன் அவைகளின் 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா

549,236 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 74,209 தொகையும், 2 - 3 வருடங்களுக்கு இடையே ரூபா 986,341 தொகையும், 1 - 2 வருடங்களுக்கு இடையே ரூபா 941,074 தொகையும் எனக் காணப்பட்டதுடன் அவைகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தொகைகள் முறையாகக் கழிக்கப்பட்டிருந்தன.

(எ) முன்னைய வருடங்களில் முற்கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவைகளைத் தீர்க்காமல் மீளாய்வாண்டின் போதும் 07 நிறுவனங்களுக்காக மீண்டும் ரூபா 17,416,686 முற்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) கைத்தொழில் மயமாக்கல்களில் இருந்து நீங்கியதாக அவதானிக்கப்பட்ட 331 கைத்தொழிலாளர்களுக்குரிய ரூபா 6,565,529 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் கணக்குகளில் பிழையான பெறுமதிகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(ii) கைத்தொழில் மயமாக்கல்களில் காணப்படுகின்ற அரசின் காணிகளின் உரித்துறுதிகள் முழுமையாகக் கையளிக்க முடியாதிருந்த போதிலும் வாடகை உரித்துறுதி முறைமையின் கீழ் காணிகளின் உரித்துறுதிகள் கையளித்தல் முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டு அவ்வாறான 126 கைத்தொழிலாளர்களுக்கு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களாக ரூபா 14,843,613 தொகை நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது.

(iii) 3 வருடங்களுக்கு மேற்பட்ட மீளச் செலுத்த வேண்டிய கேள்விப் பாதுகாப்பு வைப்புக்களாக ரூபா 887,239 தொகை காணப்பட்ட போதிலும் கொள்வனவு செயற்பாட்டு நடைமுறைகள் முடிவடைந்ததன் பின்னரும் செலுத்த வேண்டிய அவ்வாறான கேள்வி பாதுகாப்பு வைப்புக்கள் கணக்குகளில் காணப்பட்டன.

(iv) 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 48,048,396 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் கணக்குகளில் காணப்படுவதுடன் அம் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக ஆண்டின் போதும் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கு/ உறுதிபடுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் | 12,299,692 | உறுதிப்படுத்தல் அறிக்கை |
| பூர்த்தியடைந்த இருப்புக்கள் | 2,480,536 | உறுதிப்படுத்தல் அறிக்கை |
| பேலியாகொடை இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் | 20,422,093 | மூலப்பொருள் பெறுவனவு, விநியோகித்தல் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கிய இருப்புப் பேரேடு |
| முற்கொடுப்பனவுகள் | 93,117,377 | நாளதுவரையாகப் பேணப்படுகின்ற முற்கொடுப்பனவுப் பதிவேடு |

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் | ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற முழுமையான உழைப்புக்களின் |

| | |
|---|---|
| 10 ஆம் பிரிவு | அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்ற பங்களிப்புப் பணத்தினை ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்துவதற்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் நடப்பாண்டில் ஊழியர் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்ட ரூபா 49,024,124 தொகைக்கான ரூபா 10,785,306 பங்களிப்புப் பணம் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு | சேவையில் ஈடுபட்டுள்ளவர்களினால் உழைக்கப்படுகின்ற மொத்த உழைப்புக்களில் கணிப்பீடு செய்யப்பட்ட பங்களிப்புப் பணம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்துவதற்கு சேவை வழங்குனர்கள் கடமைப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஊழியர் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்ட ரூபா 49,024,124 தொகைக்கான ரூபா 1,470,725 பங்களிப்புப் பணம் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>இது தொடர்பாக தலைவர் சமர்ப்பித்திருந்த கருத்து என்னவெனில் ''அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் என்பன கணிப்பீடு செய்யப்பட்டே திறைசேரியினால் நிதி ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.'' என்பதாகும். |
| (இ) 2011 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்திய அதிகாரச்சட்டம் | உரிய மாதத்திற்கான  ழகைக்கும் போதான வரி அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 சனவரி தொடக்கம் மே வரையான காலத்திற்குரிய |

உழைக்கும் போதான வரியை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்து உள்நாட்டு இறைவரித் 269,375 திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான 269,375 நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 371(2) | வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல வருடகாலத்திற்குரிய ரூபா 2,344,750 முற்பணத் தொகை கணக்காய்வுத் திகதி (2012.03.01) வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iiii) | நி.பி 387 | காசோலை மூலம் நடைபெறுகின்ற சகல கொடுப்பனவுகளுக்காகவும் வங்கி மீதி போதியளவாக உள்ளதா என கொடுப்பனவு செய்கின்ற உத்தியோகத்தரினால் அடிக்கடி பார்த்துக்கொள்ள வேண்டியதுடன் வங்கிக் கணக்குகளில் மேலதிகப் பற்றுக்களை ஏற்படுத்தாதிருக்க வேண்டும். இருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,024,206 மற்றும் 159,835 தொகைகள் என இரு வங்கிக் கணக்குகளில் மறை மீதிகள் காணப்பட்டன. |
| (iv) | நி.பி 394 மற்றும் 396 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் செல்லுபடிக்காலம் கடந்த மற்றும் வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 63,957 தொகையான 8 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | நி.பி 453 | அங்கீகரிக்கப்பட்ட சம்பள படி நிலைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கான சம்பளம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆளணி சம்பளப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நி.பி 751 | பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சுற்றுநிருபங்கள் | | |
| | (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றிக்கை | ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | | 2.11.3 | உரிய படிவத்தின் பிரகாரம் கேள்விச் சபையின் அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | 2.14.1 | உடைந்த பொருட்களை எடுத்துச் செல்வதற்கு பல்வேறு மாவட்டங்களுக்கு கிலோமீற்றருக்கு உத்தேசிக்கப்பட்ட விலையின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் போட்டியாளர்களின் ஆகக் குறைந்த விலை பெறப்படாமல் போக்குவரத்துக் கட்டணமாக |

ஆண்டின் போது ரூபா 611,520 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

6.2.2 சில சந்தர்ப்பங்களில் கேள்வி சமர்ப்பிப்பதற்கு போதியளவான காலம் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

6.3.6 கேள்வி திறத்தல் தொடர்பான செயற்பாடுகள் உரிய படிவத்தின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 - 2013 காலப்பகுதிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமானது பெறுமதி சேர்வரி தவிர்த்து ரூபா 1,985,500 தொகை செலவில் தயாரிக்கப்பட்டிருந்தது. பதிவுத்தபால் மூலம் மாத்திரம் கேள்வி கோரப்பட்டு ரூபா 2.2 மில்லியன் கேள்வி சமர்ப்பித்திருந்த சேவை வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவரைத் தெரிவு செய்வதற்கு முன் சபையின் பிரதான கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. சேவை வழங்குனர்களிடமிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த கழிவுத் தொகையின் அடிப்படையில் ஒப்பந்த விலை ரூபா 1,985,500 வரை குறைக்கப்பட்டு அதற்காக சபையின் சிறு கொள்வனவுக் குழுவின் மேல் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டில் புதிய கூறுவிலைகள் கோரப்படும் போது கொள்வனவு பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்படாமல் 2010 மார்ச் 10 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சு அனுப்பியிருந்த கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 12.9 மில்லியன், ரூபா 13.1 மில்லியன் ரூபா 14.1 மில்லியன், ரூபா 16.7 மில்லியன் என்ற கேள்விகள் நிராகரிக்கப்பட்டு ரூபா 17.8 மில்லியன் விலையினைச் சமர்ப்பித்திருந்த பாதுகாப்புச் சேவைக் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2011 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலிவனங்களுக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 228 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு விளைவுகள் அரசாங்கத்தின் பங்களிப்பினைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன் ரூபா 234.8 மில்லியன் பற்றாக்குறைவாக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் அரசாங்கத்தின் பங்களிப்பான ரூபா 221.2 மில்லியனைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன் பற்றாக்குறை ரூபா 240 மில்லியனாக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 5.2 மில்லியன் முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது. உள்ளக வருமானம் ரூபா 28.8 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் நடைமுறைச் செலவினங்கள் ரூபா 24.5 மில்லியனால் அதிகரித்தமை இதற்கான அடிப்படைக் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) கைத்தொழில் மயமாக்கல்

நாடு முழுவதும் 15 மாவட்டங்களில் 18 கைத்தொழில் மயமாக்கல்களிலிருந்து நீங்கிய 109 கைத்தொழில் அலகுகளும், செயற்பாடற்ற 120 கைத்தொழில் அலகுகளும் காணப்பட்டன. செயற்பாடற்ற கைத்தொழில் அலகுகளில் மூடப்பட்டுள்ள 45 கைத்தொழில் அலகுகளும் அத்துமீறிக் குடியிருக்கும் 51 அலகுகளும் புதிய கைத்தொழில் ஒதுக்கீடுகளின் 28 அலகுகளும் காணப்பட்டன.

#### (ஆ) கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பொதுச் சேவை நிலையம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 106 உற்பத்திக் கிராமங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த

பொதுச் சேவை நிலையங்களில் 19 நிலையங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மக்கள் மயப்படுத்தப்பட்ட 75 பொதுச் சேவை நிலையங்களில் 46 செயற்படுவதுடன் 29 செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(iii) செயற்படுகின்ற பொதுச் சேவை நிலையங்களிலும் எல்லைச் செயற்பாட்டு நிலைமையிலுள்ள நிலையங்கள் 50% இற்குக் கிட்டிய எண்ணிக்கையில் காணப்பட்டன.

(iv) அதிமான நிலையங்களில் எதிர்பார்க்கப்பட்ட நலன்பெறுனர்களை விட குறைவான நலன் பெறுனர்களின் எண்ணிக்கையைக் காணக்கூடியதாக இருந்தன.

உதாரணங்கள்:-

| செயற்திட்டம் | எதிர்பார்க்கப்பட்ட நலன்பெறுனர்களின் எண்ணிக்கை | நலன்பெறுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குருலுகம (களிமண்) | 91 | 08 |
| குடாவெல்ல (தும்பு) | 180 | 70 |
| உடுகிரிவெல (களிமண்) | 600 | 210 |
| பெதிகங்தொட்ட (துண்டுப் பத்திரிகை) | 25 | 03 |
| திம்புல்கம்பு (துண்டுப் பத்திரிகை) | 30 | 05 |

**(இ) கிராம அபிவிருத்திச் செயற்திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) தும்புக் கைத்தொழில்**

ஹொரண இலிம்ப பிரதேசத்தில் தும்புக் கைத்தொழிலுக்காக பொது சேவை நிலையம் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 3.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் இறுதி

வரையான 05 வருடங்களிலும் கூடுதலான காலம் அச்செயற்திட்டம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

இரத்தினபுரி பம்பரகஸ்தென்ன தும்புக் கைத்தொழிலுக்கு இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 1.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அது வெற்றியளிக்காமையின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகள் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் உடன்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ii) உருக்குத்தொழில் கிராமம்**

எப்பிடவத்த உருக்குத்தொழில் கிராமத்தின் பொது சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 257,525 பெறுமதியான பொருட்கள் மற்றும் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 32,175 தொகையான பொருட்கள் என்பன உரிய நியமங்களில் இல்லாமை மற்றும் அவைகள் செயற்பாடற்றிருந்தமை என்பவற்றினால் 04 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

பன்வில பிரதேச செயலகப் பிரிவில் உடுகொட உருக்குத்தொழில் கிராமத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 210,000 பெறுமதியான பெல்ட்ஹெமர் இயந்திரம், ரூபா 29,000 பெறுமதியான இரண்டு பட்டறைக்கற்கள் மற்றும் ரூபா 21,775 பெறுமதியான 02 இடுக்கிகள் என்பன நியமங்களில் தரம் குறைந்தமையினால் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**(iii) ஆபரணக் கிராமம்**

எஹலியகொட நாகந்தல ஆபரணக் கிராமத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 168,298 பெறுமதியான பொருட்கள் உரிய நியமத்தில் காணப்படாமையினால் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

மக்கள் மயப்படுத்தப்பட்ட கிராம செயற்திட்டங்கள் தொடர்பாக தலைவர் பின்வருமாறு ‘‘வரிசை அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் கிராம செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனமாக சபை

செயற்படுவதுடன் கிராம செயற்திட்ட நிர்மாண வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் மக்களுக்கு கையளிக்கப்படும். இதனைப் பராமரிப்பதற்காக நலன் பெறுனர்களின் அங்கத்துவம் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றமை. கிராம செயற்திட்டம் அமுல்படுத்தலில் பின்தொடர் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றமை'' எனக் கருத்தத் தெரிவித்திருந்தார்.

## 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி பிரதேசத்தில் கணனி பயிற்சி நிலையம் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு பாடநெறி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு 2011 ஏப்ரல் 07 ஆந் திகதி உரிய செயற்திட்டம் வெற்றியளிக்காததன் அடிப்படையில் மூடப்பட்டு கணனி உள்ளடங்கலாக உபகரணங்கள் பிரதான அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. இதற்கான கட்டிட வசதிகள் இரத்தினபுரி தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் கணனி ஆய்வு கூடம் அமைத்தல், குளிருட்டிகள் வழங்குதல் போன்றவற்றிற்கு ரூபா 731,224 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) ஐக்கிய நாடுகள் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 05 மாவட்டங்களுக்காக 35,410 மண் அடுப்புக்கள் 2011 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன் வழங்குவதற்கு 2011 சனவரி 05 ஆந் திகதி ரூபா 7,231,517 தொகையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 யூன் 28 ஆந் திகதி வரையில் குறிப்பிடப்பட்ட அடுப்புக்களின் எண்ணிக்கையில் ரூபா 3,244,845 பெறுமதியான அடுப்புக்கள் அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட பெறுமதியில் 46% மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையினால் 2011 யூலை 01 ஆந் திகதி உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் முதலாவது காலாண்டிற்குரிய பெறுமதிசேர் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கின்ற போது ரூபா 813,387 தொகை குறைவாக அனுப்பப்பட்டிருந்தது.

(ஈ) 05 டெஸ்க்டொப் கணனிகள் கொள்வனவின் போது சகல தேவைகளையும் பூர்த்தி செய்த இரண்டாவது ஆகக் குறைந்த விலைக்குப் பதிலாக மூன்றாவது ஆகக் குறைந்த விலையுடைய கேள்வி தெரிவு செய்யப்பட்டமையினால் சபைக்கு ரூபா 17,000 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) விற்பனைப் பிரிவிற்காக 03 கணனிகள் கொள்வனவின் போது சகல வேண்டுதல்களையும் பூர்த்தி செய்த இரண்டாவது ஆகக் குறைந்த விலைக்குப் பதிலாக ஏழாவது ஆகக் குறைந்த விலையுடைய கேள்வி தெரிவு செய்யப்பட்டமையினால் ரூபா 13,500 தொகையான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) கழிவுப் பொருட்கள் செயற்திட்டம்

கழிவுப் பொருட்கள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கிய அமைச்சரவைத் தீர்மானித்திற்கு இணங்க கழிவுப் பொருட்களின் கொள்வனவு, விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்துதல் என்பவைகளுக்குரிய பிரமாண முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையின் காரணமாக கொள்வனவுகளின் போதும், விற்பனைகளின் போதும் மற்றும் களஞ்சியப்படுத்தலின் போதும் பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது முற்கொடுப்பனவாக 06 நிறுவனங்களுக்கு ரூபா 4,625,697 தொகையானது செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பொருட்களை சபைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது முற்கொடுப்பனவுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,095,970 பெறுமதியான கழிவுப் பொருட்கள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைத்தல் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சிறு கைத்தொழிலாளர்களுக்கு சாதாரண விலையில் கழிவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2011 சனவரி தொடக்கம் யூலை வரை ரூபா 16,708,157 பெறுமதியான கழிவுப் பொருள் இருப்பு விற்பனையில் 50% ஆனவை 4 கைத்தொழிலாளருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(iv) சில சந்தர்ப்பங்களில் கழிவுப் பொருட்கள் உரிய பிரகாரம் நிறுக்கப்பட்டு கையேற்கப்படாமையினால் வெளியாருக்கு விற்கும் சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்படுகின்ற சகல பொருட்களினதும் பெறுவனவுக் குறிப்புக்களுடன் உள்ள விற்பனைகளின் பெறுமதி ரூபா 415,458 ஆக இருந்தது.

(v) இம்மியன்கொட கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுகின்ற இடத்தில் கழிவுப் பொருள் இருப்புக்கள் 2011 ஏப்ரல் 29 ஆந் திகதி முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருட்கள் நிலையமும் மூடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ஆவணங்களின் பிரகாரம் கிரயம் ரூபா 4.6 மில்லியனான 304.7 மெட்ரிக் தொன் கழிவுப் பொருள் இருப்பொன்று எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் உள்ளவாறாக விற்பனை செய்யக் கூடிய அவ்வாறான இருப்புக்களின் மீதியொன்று காணப்படாமையினால் அந்த அளவினால் இருப்புப் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

முன்னைய வருடங்களில் பெறப்பட்டிருந்த போதிலும் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் கடன் கொள்வனவு மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிராத ரூபா 490,493 தொகைக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்காக சபைக்கு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி முகாமையாளரைச் சேர்ப்பதற்கான பரீட்சை நடாத்துதல் செயற்பாடுகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற நபரொருவருக்கு ஒப்படைக்கப்பட்டு அதற்காக செலுத்த வேண்டிய தொகையில் 50% முற்பணமான ரூபா 65,000 தொகை அந்நபரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையினால் பரீட்சையொன்று நடத்துதலின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) போலியகொட இறப்பர் நிலையத்தில் செயற்பாடற்ற 4 இயந்திரங்களும், உபயோகத்தில் ஈடுபடுத்தப்படாத 5 இயந்திரங்களும் காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான முன்னர் கொழும்பு மாவட்ட அலுவலகம் நடாத்தப்பட்ட 2000 சதுர அடியான கட்டிடம் 06 மாதத்திற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது என அறிவிக்கப்பட்ட பாதணிகள் உற்பத்தி செய்யும் 16 இயந்திரங்கள் அதிக காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மேற்கூறப்பட்ட நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கிராம செயற்திட்டத்திற்குரிய ரூபா 2,771,972 பெறுமதியான பாதணிகள் தைக்கும் 28 இயந்திரங்கள் மேற்கூறப்பட்ட தோற் பொருட்கள் நிலையத்தில் செயற்பாடற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பொதுச் சேவை நிலையங்களுக்கும் நலன் பெறுனர்களுக்குமாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,712,136 பெறுமதியான பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன. இப்பொருட்கள் 1 தொடக்கம் 6 வருடங்களுக்கிடையிலான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களாகும்.

இப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதிக காலம் கடந்திருந்தமையினால் அவற்றின் உத்தரவாதக் காலம் காலாவதியாகியிருந்தது. சில பொருட்கள் உபயோகிக்கப்படாது காணப்பட்டமையினால் மீள செலவினங்களைச் செய்து பழுது பார்க்க வேண்டியிருந்தது. சில பொருட்கள் எலிகள் போன்ற பிராணிகளினால் அழிவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) இரத்தினபுரி பள்ளேகெதர தோற்பொருள் சார்ந்த உற்பத்தி கிராம செயற்திட்டத்திற்காக ரூபா 5.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது 2006 ஆம் ஆண்டிலிருந்து 5 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. தலைவரின் பதிலின் பிரகாரம் தற்போது தனியார்

நிறுவனமொன்றினால் குத்தகை அடிப்படையில் உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெறுவதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அது இந்த நிகழ்ச்சித் திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை நோக்கங்களுக்கு புறம்பாக இருந்தது.

(ஊ) பதுளை மாகாண அலுவலகத்திற்கு முன்னால் ரூபா 1,412,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உற்பத்திக் கண்காட்சிக் கூடம் மற்றும் சந்தைப்படுத்தல் நிலையம் 2008 ஆம் ஆண்டின் இறுதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி வரை உபயோகத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கோணபுர உணவு செயற்திட்டத்திற்காக 2006 பெப்ரவரி 03 ஆந் திகதி ரூபா 298,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த (3 Dough Mixer Machine) 3 டோஹ் மிக்சர் இயந்திரங்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவைகளின் உத்தரவாதக் காலமும் கடந்திருந்தது.

(ஏ) மஹியங்கன மியுறுகல திம்புலவத்த என்ற பெயருடைய 80 பேர்ச்சஸ் காணியில் அமைந்துள்ள 1400 சதுர அடி அளவிலான நீர், மின்சார வசதிகளுடனான கட்டிடம் மற்றும் காணி என்பன 14 வருடங்களுக்கும் மேலாக எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பன்னல பொருத்தமான தொழில் நுட்ப நிலையத்தில் 25 பேர் அளவில் வசிக்கக் கூடிய விடுதிவசதி காணப்படுவதுடன் 2004 ஆம் ஆண்டிலிருந்து அது மூடப்பட்டிருந்தது.

(ஒ) காளான் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,180,000 பெறுமதியான காளான் உலர்த்தும் இயந்திரத்தின் ஒரு பகுதி காணாமல் போயிருந்ததுடன் எஞ்சிய பகுதிகள் பொருட் பதிவேட்டிற்குக் கொண்டுவரப்படாமல் செயற்பாடற்று சபையின் வளவில் காணப்பட்டது.

(ஓ) 18 வருட காலமாக கொடுக்கல் வாங்கல்கள் நிறுத்தப்பட்டுள்ள கைத்தொழில் கம்பனியில் ரூபா 5.3 மில்லியன் முதலீட்டில் எவ்வித பெறுமதியும் இன்றி இறுதிக் கணக்குகளில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) நடப்பாண்டின் போது பிரதேச அலுவலகங்கள் மற்றும் சபையின் ஏனைய பிரிவுகளின் கீழ் காணப்பட்ட 25 வங்கிக் கணக்குகள் மூடப்பட்டிருந்த போதிலும் அதில் 11 வங்கிக் கணக்குகளில் மேலும் ரூபா 161,900 தொகையான சாதமான மீதிகளும், 02 வங்கிக் கணக்குகளில் ரூபா 2,184,041 தொகையான மேலதிகப் பற்று மீதிகளும் நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஔ) தற்போது உபயோகத்திலில்லாத ஜீஎஸ்ரீ வரியாக ரூபா 1,424,654 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வருவன அவதானிக்கப்படுகின்றன.

முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூப இல. 30 இன் பிரகாரம் சரியான சம்பளப் படிநிலைகள் உரித்தாக்கப்படாமையினால் பிழையாக சம்பளம் கணிப்பீடு செய்யப்பட்டு 2006 தொடக்கம் 2010 வரையான கால எல்லையினுள் ரூபா 6,268,931 தொகை மேலதிகமாகவும் ரூபா 1,212,589 தொகை குறைவாகவும் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.6 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | மிகை / (பற்றாக்குறை) |
|---|---|---|---|
| பதவி நிலை | 264 | 206 | (58) |
| எழுது வினைஞர் மற்றும் சமமான | 236 | 131 | (105) |
| சிற்றூழியர் | 264 | 195 | (69) |
| | 764 | 532 | (232) |

(அ) முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூப இல. 30 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 மே மாதம் தொடக்கம் 2011 யூலை 31 வரை சபையினால் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூப இல. 30 இற்கு முரணாக 76 நிரந்தர பதவிகளும், ஒப்பந்த அடிப்படையில் 09 பேரும் சேர்க்கப்பட்டு 02 தொடக்கம் 04 வருடங்கள் வரையான ஒப்பந்த காலத்திற்கு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே அங்கீகாரமின்றி அமைய அடிப்படையில் 41 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சேவைக்காலம் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரையான வீச்சுடையதாக இருந்தது.

(இ) பணிப்பாளர் தொழில் நுட்ப சேவைப் பதவிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாது விஞ்ஞான அல்லது பொறியியல் பட்டத்துடன் உரிய துறையில் 15 வருட பதவி நிலை அனுபவம் மற்றும் அதில் 8 வருட சிரேஷ்ட நிறைவேற்றுப் பதவியில் இருக்க வேண்டியிருந்தமையும் செய்திப் பத்திரிகையின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட போதிலும் அதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் 15 வருட அனுபவத்திற்கு பதிலாக தனியார் துறையில் பல்வேறு முகாமைத்துவ சேவைகளில் 13 வருட காலம் அனுபவத்துடன் இருந்தமை காட்டப்பட்டிருந்ததுடன் 08 வருட சிரேஷ்ட நிறைவேற்று அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்டிருந்த அனுபவங்களும் உரிய நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.7 ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகளுக்கான நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

ஊழியர் பணிக்கொடைக்காக ரூபா 106.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிதி பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை

இது தொடர்பாக தலைவரின் கருத்து என்னவெனில் ''திறைசேரி ஏற்பாடுகளின் அடிப்படையில் சம்பளம் மற்றும் பணிக்கொடை என்பன செலுத்தப்படுகின்றமையினால் முதலீட்டுக்காக நிதி ஈடுபடுத்த முடியாதிருந்தமை'' என்பதாகும்.

**3.8 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கிராமத்திற்கு கிராமம் தொழில் நுட்பத்தை பகிர்ந்தளிக்கும் நோக்கத்தில் 2009 ஆம் ஆண்டில் ரூபா 8,711,713 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பஸ் வண்டி 2011 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட திட்டமின்றி 04 கண்காட்சிக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காகவும் கிலோ மீற்றர் 2000 ஐ விட குறைவாகவே ஓடப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போதும் 08 பிரயாணங்களுக்காக கிலோ மீற்றர் 3098 மாத்திரம் ஓடப்பட்டிருந்தமையால் குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றது.

(ii) மேற்கூறப்பட்ட செயற்திட்டம் வெற்றியளிக்காததன் அடிப்படையில் பஸ் வண்டி நீண்ட காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் கூடிய செலவில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய நிலைமையில் காணப்படுகின்றது.

(iii) சபைக்குச் சொந்தமான 41 வாகனங்கள் காணப்படுவதுடன் மைலோ மீற்றர் செயற்படாதிருந்த 05 வாகனங்களும் அவதானிக்கப்பட்டன.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வருவன அவதானிக்கப்படுகின்றன.

சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மாநாடுகள் மற்றும் செயலமர்களுக்கான வள வழங்குனர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பதும் அவர்களுக்காக மணித்தியாலத்திற்கு ரூபா 2,500 ரூபா 3,500 மற்றும் 06 மணித்தியாலங்களுக்கு ரூபா 10,000 போன்ற வீதங்களில் எவ்வாறான அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டது என்பதும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

## 4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

(அ) 2011 – 2013 ஆம் ஆண்டுகளுக்காக சபையினால் ரூபா 2 மில்லியன் செலவில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளில் அதிகமானவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்டிருந்த இலக்குகளை செயல்முன்னேற்ற அறிக்கைகளுடன் இணக்கஞ் செய்த போது ஆண்டின் இறுதி வரை 07 பிரிவுகளுக்குரிய அமுல்படுத்தப்படாத 121 செயற்பாடுகள் காணப்பட்டதுடன் 50% இனை விட அமுல்படுத்தப்படாத 20 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்காக தனியான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 7.1.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடைபெற வேண்டியிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஒன்றும் அதன் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு கால அட்டவனையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2 மூலதன செலவின விடயத்திற்காக ரூபா 0.7 மில்லியன் தொகையும், 09 மீண்டெழும் செலவின விடயத்திற்காக ரூபா 8.8 மில்லியன் தொகையும் பாதிடப்பட்ட செலவினங்களை விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்தன.

2003 யூன் 03 ஆந் திகதிய நல்ல ஆளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட வருமான செலவுக் கணக்குகள், பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதன் பிரகாரம் பாதீடானது சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) லக்கம் விற்பனை நிலையத்தின் கைத்தொழிளாளர்களின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் காசு செலுத்தும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுவதுடன் இருப்புக்களின் பெறுவனவு விநியோகித்தல்களுக்காக ஒழுங்கான முறையில் இருப்புப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(i) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல்
(ii) கணக்கீடு மற்றும் கணணி முறைமை
(iii) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(iv) வாகனப் பயன்பாடு மற்றும் பதிவேடுகள் பேணுதல்
(v) கழிவுப் பொருள் கொள்வனவு, விற்பனை தொடர்பான கட்டுப்பாடு
(vi) முற்பணம்
(vii) இருப்புக் கட்டுப்பாடு